# எத்தனை போட்டியாளர்கள் வந்தாலும் – வெற்றி தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்குத்தான் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி!

**செய்தியாளர்:** *அதிமுகவை பாஜகவிடம் “அடமானம்” வைத்துவிட்டதாக நீங்கள் எடப்பாடி பழனிசாமியை விமர்சித்திருக்கிறீர்கள். இருப்பினும், கூட்டணியில் பாஜகவிற்கு குறைந்த எண்ணிக்கையிலான இடங்களை மட்டுமே அவர் ஒதுக்கியிருப்பதாகவும், பாஜக விரும்பிய தொகுதிகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. தமிழ்நாட்டில் 2026க்கான பாஜக மற்றும் அதிமுகவின் உத்தி என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** நோட்டாவுடன் போட்டியிட்ட கட்சி இதுவரை தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே இல்லாத வகையில் NDA கூட்டணியில் 27+6 என 33 தொகுதிகளில் நிற்கிறது. இதுவா குறைந்தபட்ச இடம்? இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மட்டும்தான், தன்னைத் தானே கூட்டணிக்குத் தலைமை, முதலமைச்சர் வேட்பாளர் எனத் தம்பட்டம் அடிக்கிறாரே தவிர பிரதமர் மோடியும், அமித்ஷாவும் அதை ஏற்றுக் கொள்ளாமல் NDA அரசை அமைப்போம் என்று தானே பேசி வருகின்றனர். வீரமுள்ள பழனிசாமி பிரதமர் மோடியையும், அமித்ஷாவையும் நேரடியாய்க் கண்டித்தாரா? இல்லையே!

அதனால்தான் பா.ஜ.க.வின் அடிமை பழனிசாமி என நாங்கள் மட்டுமல்ல, மக்களே சொல்கிறார்கள். அ.தி.மு.க. - பா.ஜ.க. எத்தகைய வியூகங்களை வகுத்தாலும் அது எதுவும் இந்தத் தேர்தலில் எடுபடாது.

**செய்தியாளர்:** *தமிழ்நாட்டின் வரி வருவாயை ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களுக்காகச் செலவிடுவதாக நீங்கள் குற்றம் சாட்டியுள்ளீர்கள். இருப்பினும், ஒரு தொழில்மயமான மாவட்டத்தில் கிடைக்கும் வருவாய் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் அதே தர்க்கத்தின்படி, கூட்டுறவு கூட்டாட்சியின் (Cooperative Federalism) ஒரு பகுதியாக, வளர்ச்சியடைந்த மாநிலங்கள் பின்தங்கிய மாநிலங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்று சில பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். இதற்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** வளர்ச்சியடையாத மாநிலங்களை வளர்க்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதற்காக வளர்ந்த மாநிலங்களைப் பட்டினி போடுவது எந்தவிதத்தில் நியாயம்? நன்றாகச் செயல்படும் மாநிலங்களை ஊக்குவிப்பதுதான் சிறந்த கொள்கையாக இருக்க முடியும். அதற்கு மாறாக, சரியான நிர்வாகத்தை அளிக்காமல் பின்தங்கியிருப்பதற்கு வெகுமதி என்பதும், நல்லாட்சியால் வளர்வது குற்றம் என்பது போல அதனைத் தண்டிப்பதையும்தான் நாங்கள் கேள்வி கேட்கிறோம். எங்கள் சகோதர மாநிலங்களின் இன்னல்களைப் பகிர்ந்துகொள்வதிலோ, உதவுவதிலோ எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தனக்கு வேண்டிய மாநிலங்களுக்கு மட்டும் அதிக நிதி என்ற போக்கையும், அளவுகடந்து தமிழ்நாட்டைச் சுரண்டுவதையும் எதிர்த்துதான் நிதித் தன்னாட்சிக்கான எங்கள் குரல் ஒலிக்கிறது. தமிழ்நாடு வலிமையாக, தன்னிறைவாக இருந்தால்தானே பிறருக்கு உதவ முடியும்?

வளர்ந்த தமிழ்நாட்டில் இருந்து வளராத மாநிலங்களுக்கு நிதியைக் கேட்கும் பா.ஜ.க. அரசு, அதற்கு பதிலாக, தமிழ்நாடு ஏன் வளர்ந்துள்ளது எனக் கண்டறிந்து, எங்கள் கொள்கைகளை பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் செயல்படுத்திப் பார்க்க வேண்டும். மாறாக, நீட், தேசிய கல்விக் கொள்கை வளராத அவர்களின் கொள்கைகளை இங்குத் திணிக்க கூடாது.

மொழி உரிமை போல நிதி உரிமையும் எங்களுக்கு முக்கியமானது தான். உண்மையான கூட்டாட்சியினை உறுதிசெய்ய வேண்டும் என்பதற்காகத்தான் மாநிலங்களுக்கான நிதி பகிர்வை 50 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

**செய்தியாளர்:** *தமிழ்நாடு 11.19% (நிலையான விலையில்) என்ற சாதனை அளவிலான ஜிஎஸ்டிபி (GSDP) வளர்ச்சியை 2024 25இல் எட்டியுள்ளது, இது நாட்டிலேயே மிக அதிகமாகும். உலகளாவிய நிச்சயமற்ற நிலைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மாற்றங்களால் வேலைவாய்ப்பு சந்தையில் எதிர்பார்க்கப்படும் விரைவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, நீங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த வளர்ச்சி விகிதத்தை எவ்வாறு தக்க வைப்பீர்கள்?*

## தலைவர் கலைஞரிடம் கற்றதுதான் எனக்கு வழி காட்டுகிறது! ஒவ்வொரு நாளும் நான் அவரை நினைத்து ஏங்குகிறேன்!

### தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயரும்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 14 ஆண்டுகளுக்குப் பிறகு யாருமே எதிர்பார்க்காத வகையில் 11.19% என்ற இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியைச் சாத்தியப்படுத்திக் காட்டியுள்ளோம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதை இலக்காக நிர்ணயித்துள்ளோம். உறுதியாக நிர்ணயித்த இலக்கை அடைவோம். அதேபோல AIயை எதிர்கொள்ளும் திறனை இளைஞர்களிடையே வளர்த்தெடுப்போம். AI என்பது தடையல்ல வளர்ச்சிக்கான படிக்கட்டுதான்.

**செய்தியாளர்:** *மாநில சுயாட்சியில் நீங்கள் உறுதியாக இருப்பதைப் போலவே, பாஜகவும் தனது சித்தாந்தத்தில் உறுதியாக இருப்பது போல் தெரிகிறது. ‘சமக்ர சிக்ஷா’ (Samagra Shiksha) நிதி விடுவிக்கப்படாதது மற்றும் உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பிற்குப் பிறகும், அடுத்தடுத்த சட்டச் சிக்கல்கள் மூலம் துணைவேந்தர்கள் நியமனத்தில் நீடிக்கும் இழுபறி ஆகியவற்றில் இதை நாம் காண்கிறோம். இதன் விளைவாக, தமிழகத்திற்குத் தொடர்ந்து நிதி கிடைப்பதில்லை, பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர்கள் இல்லாமல் இயங்குகின்றன. இதிலிருந்து மீள்வதற்கான வழி என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** நாங்கள் நியாயமான உரிமைகளுக்காகப் போராடுகிறோம். அவர்கள் அடக்குமுறை மூலம் தலைகுனிய வைக்கத் துடிக்கிறார்கள். எந்த அடக்குமுறைக்கும் அஞ்சி தமிழ்நாடு தலைகுனியாது. எங்களின் சட்டப்போராட்டமும், மக்கள் மன்றத்தில் பாசிச சக்திகளை வீழ்த்தும் போராட்டமும் தொடரும். தமிழ்நாடு வெல்லும்.

### கார்ப்பரேட்டுகளின் பக்கமுள்ளவர்கள் சாமான்யர்களுக்கு வழங்கும் சலுகையை எதிர்ப்பார்கள்!

செய்தியாளர்: *திமுகவின் தேர்தல் அறிக்கைதான் இந்தத் தேர்தலின் கதாநாயகன் மற்றும் கதாநாயகி என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். இந்த அறிக்கையின் முக்கிய அம்சமாக ‘இல்லத்தரசித் திட்டம்’ (Illatharasi Scheme) அதிக கவனத்தைப் பெற்றுள்ளது. ஆனால், ‘விடியல் பயணம்’ மற்றும் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ போன்ற திட்டங்களில் உள்ள கட்டமைப்பு ரீதியான அதிகாரமளிக்கும் அணுகுமுறையை விட, இது தேர்தல் கவர்ச்சிக்கே முன்னுரிமை அளிப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். மற்றக் கட்சிகளின் போட்டித் தன்மையுடன் கூடிய கவர்ச்சி அரசியலில் (Competitive Populism) இருந்து இல்லத்தரசித் திட்டத்தை எது வேறுபடுத்துகிறது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எப்போதுமே மக்கள் நலத் திட்டங்களைக் கொச்சைப்படுத்தும் கூட்டம் இருந்து கொண்டேதான் இருக்கும், கார்ப்பரேட்களின் வாராக் கடன்கள் பல இலட்சம் கோடியை ஒன்றிய பாஜக அரசு தள்ளுபடி செய்வது, ஒருகுறிப்பிட்ட முதலாளிகள் செல்வம் கொழிக்க சலுகைகளை அள்ளி வழங்குவது எல்லாம் அவர்களின் கண்களுக்குத் தெரியாது. சாதாரண மக்களுக்கு அளிக்கும் நலத்திட்டங்கள் மட்டுமே அவர்களின் கண்களை உறுத்தும். 8000 ரூபாய்க்கான கூப்பன் வழங்கும் இல்லத்தரசி திட்டம், வீட்டுவேலைகளில் உழலும் பணிச்சுமையைக் குறைப்பதற்கான புரட்சித் திட்டம். மகளிரின் உடலுழைப்பைக் குறைத்து, நேரத்தை மிச்சப்படுத்தும் புரட்சித் திட்டம். அதனால்தான், பணமாகக் கொடுக்காமல், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்கான கூப்பனாகக் கொடுக்கிறோம்.

தி.மு.க. தேர்தல் அறிக்கை எப்போதுமே மக்களின் வாழ்வை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு அறிவிக்கப்படுபவை. இந்த தேர்தலில் எங்களின் தேர்தல் அறிக்கை

## டெல்லி தலையீடு இல்லையென்றால் கூட்டணி பேச பழனிசாமி டெல்லி பா.ஜ.க.விடம் ஓடியது ஏன்?

தான் சூப்பர் ஸ்டார். அதனால்தான் அந்த சூப்பர் ஸ்டாரை எதிர்கொள்ள முடியாமல் தோல்வி பயத்தில் புலம்பத் தொடங்கிவிட்டனர் எதிர்க்கட்சியினர்.

இந்தத்திட்டம் இந்தியா முழுமைக்கும் பயணிக்கும். எங்களின் இந்த Superstar தான் Pan India starஆக வலம்வரப் போகிறது.

### ஆட்சி குறித்து அவதூறு பரப்புவோருக்கு மக்கள் தக்க பாடம்புகட்டுவார்கள்!

**செய்தியாளர்:** *சட்டம் ஒழுங்கு, ஊழல் மற்றும் வாரிசு அரசியல் என மூன்று முக்கிய தளங்களில் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கடந்த அ.தி.மு.க. ஆட்சியை விட எங்களது ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது. குற்றங்களைத் தடுப்பதிலும் சரி, குற்றவாளிளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத்தருவதிலும் சரி, முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. ஆகவே சட்டம் ஒழுங்கு பற்றி குறை கூறுவதெல்லாம் வெற்று அவதூறுகள். இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே ஆட்சி அமைக்க முடியும் அதுதான் மக்களாட்சி. இங்கு மக்கள்தான் எஜமானர்கள். அதை அறியாமல் அவதூறு பரப்புவோர்க்கு மக்களே தக்க பாடம் புகட்டுவார்கள்.

**செய்தியாளர்:** *2026இல் திமுகவை நீங்கள் வெற்றிக்கு அழைத்துச் சென்றால், 1971க்குப் பிறகு ஒரு கட்சி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வருவதன் மூலம் நீங்கள் ஒரு புதிய வரலாற்றைப் படைப்பீர்கள். தற்போதைய உங்கள் அரசு ஏராளமான புதிய நலத்திட்டங்கள், ஈர்க்கக்கூடிய பொருளாதார வளர்ச்சி எனப் பல பெருமைகளைத் தன் வசம் வைத்துள்ளது. இதே போன்ற சிறப்புகள் 19962001 ஆட்சிக் காலத்திற்கும் இருந்தது. இருப்பினும், அதிமுகவை விட திமுகதான் ‘ஆளுங்கட்சி எதிர்ப்பு’ (Anti incumbency) அலையால் அதிகம் பாதிக்கப்படக்கூடியது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அப்படியிருக்க, மே 4ஆம் தேதிக்குப் பிறகு மீண்டும் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ எனும் நான் என்று நீங்கள் பதவிப்பிரமாணம் எடுப்பீர்கள் என்கிற அந்த அசைக்க முடியாத நம்பிக்கையை உங்களுக்கு எது தருகிறது?*

### தமிழ்நாட்டில் நிறைவேற்றியுள்ள திட்டங்களே எங்களுக்கு வெற்றியைத் தரும்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 100 சதவீதம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும். இதை நான் கர்வத்தில் சொல்லவில்லை மக்களிடம் இருக்கும் பேராதரவை வைத்துச் சொல்கிறேன். எங்களின் நலத்திட்டங்களால் பயன்பெறாத குடும்பங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கி உள்ளோம். தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கத்தைப் பேணி அமைதியை நிலைநாட்டி வருகிறோம். கல்வி, வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயலாற்றி வருகிறோம். மகளிரின் உயர்வுக்கு வழிவகுக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம் இதன் காரணமாக மக்களிடம் Pro Incumbencyதான் நிலவுகிறது. தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடு 200 தொகுதிகளுக்கு மேல் வென்று மீண்டும் ஆட்சி அமைப்போம். தமிழ்நாட்டின் வளர்ச்சியும், மக்களுக்கான நலத் திட்டங்களும் தடையின்றித் தொடரும்.

### கழக அரசின் சாதனைகளைக் காண கலைஞர் இல்லை என்பதே ஏக்கம்!

**செய்தியாளர்:** *உங்கள் தந்தை, அல்லது தலைவர் இருந்தபோது,வழிகாட்டுதலுக்காக அவரை நாடும் ஆறுதல் உங்களுக்கு இருந்திருக்கலாம். அவர் இல்லாததை நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்கள், மேலும் அவரை நீங்கள் இழந்து தவிக்கும் தருணங்கள் உண்டா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தலைவர் கலைஞர் 60 ஆண்டுகளுக்கும் மேலாக எனக்குக் கற்பித்தார். அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை ஏராளம்; அந்தக் கற்றல் இன்றும் எனக்கு வழி காட்டுகிறது. நான் ஒவ்வொரு நாளும் அவரை நினைத்து ஏங்குகிறேன். கடந்த ஐந்தாண்டுகளில் நாங்கள் அறிமுகப்படுத்திய திட்டங்களுக்காகவும், ஆற்றிய பணிகளுக்காகவும் பலரும் என்னையும் எங்கள் அரசையும் பாராட்டுகிறார்கள். எங்கள் சாதனைகள் அனைத்தையும் காண அவர் இங்கு இருந்திருக்க வேண்டும் என்பதே என் ஒரே ஆசை.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



### ‘தமிழ் மாநில தேசிய லீக்’ கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

#### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | சட்டமன்ற தொகுதி |
|---|---|
| 10-4-2026 | கொளத்தூர், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, அடையாறு குர்பானி பீர் பள்ளி (பெரிய பள்ளி) |
| 11-4-2026 | செஞ்சி |
| 12-4-2026 | சிதம்பரம் (லால்பேட்டை) |
| 13-4-2026 | பாபநாசம் |
| 14-4-2026 | நன்னிலம் |
| 15-4-2026 | நாகப்பட்டினம் (நாகூர்) தஞ்சாவூர் |
| 16-4-2026 | திருச்சி |
| 17-4-2026 | மதுரை |
| 18-4-2026 | பாளையங்கோட்டை (மேலபாளையம்) |
| 19-4-2026 | தென்காசி |
| 20-4-2026 | வாணியம்பாடி, வேலூர், ஆம்பூர் |
| 21-4-2026 | இராயபுரம், துறைமுகம் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வீதி, வீதியாக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்!

### பகுதிக் கழகச் செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கை!

*சென்னை, ஏப்.11-*

*மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (11.4.2026) சனிக்கிழமை 172வது வட்டத்தில் காலை 7 மணி முதல் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குச் சேகரிக்கிறார்.*

*அதன் விவரம் வருமாறு:*

*172வது வட்டம்: காலை 7 மணி முதல் 12 மணி வரை*

*காலை 7 மணிக்கு வண்டிக்காரன் தெரு - பாலாஜி காலனியில் தொடங்கி அங்காளம்மன் கோயில் 1வது தெரு, 2வது தெரு - சங்கீதா குடியிருப்பு, ரேஸ் வியூ அப்பார்ட்மெண்ட், ராமன் அவென்யூ, சி.டி.எஸ். குயிருப்பு, நேருநகர் முதல் பிரதான சாலை வழியாக நேருநகர் 1 முதல் 4 தெருக்கள், பிள்ளையார் கோயில் தெரு, சத்தியமூர்த்தி தெரு, வீரவாஞ்சிநாதன் தெரு, அன்பழகன் தெரு, கோவிந்தசாமி தெரு, பாரதிதாசன் தெரு, ஜீவானந்தம் தெரு, கே.வி.கே. சாமி தெரு, கன்னியம்மன் கோயில் தெரு, நேருநகர் கிழக்கு நெடுஞ்செழியன் தெரு, மாதவன் தெரு, அன்பில் தர்மலிங்கம் தெரு, வி.பி.கே. தெரு, பெரியார் தெரு, காமராஜபுரம் - பசும்பொன் தெரு, மருது பாண்டி சாலை, கங்கை அம்மன் கோயில் மெயின் சாலை, பிரதாப் சந்திரன் தெரு, கங்கை அம்மன் கோயில் 1வ்து தெரு, குமரன் தெரு, காந்தி தெரு, பாரதி தெரு, கணபதிநகர் முழுவதும், கே.ஆர்.ராமசாமி நகர், வேளச்சேரி மெயின் ரோடு - அண்ணா கார்டன் 1வது மற்றும் 2வது தெரு, ஐ.ஐ.டி. - நுழைவுவாயிலில் நண்பகல் 12.30 மணி வரை வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெறும்.*

*மாலை 4 மணிக்கு பிள்ளையார் கோயில் தெரு, கங்கை அம்மன் கோயிலில் தொடங்கி, பிள்ளையார் கோயில் தெரு முழுவதும், மசூதி காலனி புது தெரு, மசூதி காலனி 2வது தெரு, 1வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, 11வது தெரு, 6வது தெரு, 7வது தெரு, 8வது தெரு, 9வது தெரு, 10வது தெரு, சந்திரன் தெரு, மேட்டுப்பாளையம் மேட்டுத் தெரு, 12வது தெரு, 13வது தெரு, 14வது தெரு, 15வது தெரு, 16வது தெரு, 17வது தெரு, நரசிங்கபுரம் 7வது தெரு, 6வது தெரு, 5வது தெரு, 4வது தெரு, 3வது தெரு, 2வது தெரு, 1வது தெரு முடித்து பழைய நரசிங்கபுரம் - ரேஸ் வியூ காலனி 3வது தெரு, 2வது தெரு, 1வது தெரு முடித்து பாரதிநகர் எம்.ஜி.ஆர் தெரு பிள்ளையார் கோயில் தெரு, அம்பேத்கர் தெரு, கிருஷ்ணமூர்த்தி தெரு, டேங்க் தெரு, பாரதி தெரு, நேதாஜி தெரு, ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள குடியிருப்பில் இரவு 9 மணிக்கு நிறைவு பெறுகிறது.*

*எனவே மேற்கண்ட வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.கழக நிர்வாகிகள், கூட்டணிக்கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், தோழர்கள் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



### அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி சி.என்.ராமமூர்த்தி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

#### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | சட்டமன்ற தொகுதி |
|---|---|
| 13.04.2026 | மயிலாப்பூர், அம்பத்தூர் |
| 14.04.2026 | ராணிப்பேட்டை |
| 15.04.2026 | திருப்பத்தூர் |
| 16.04.2026 | தருமபுரி |
| 17.04.2026 | ஆரணி |
| 18.04.2026 | போளூர் |
| 19.04.2026 | குன்னம் |
| 20.04.2026 | திண்டுக்கல் |
| 20.04.2026 | ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம். |
| 21.04.2026 | திருச்சி கிழக்கு |
| 22.04.2026 | நெய்வேலி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர். மாதவரம் எஸ். சுதர்சனம் 30 அ வட்டத்தில் வீதி. வீதியாக வாக்காளர்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், வட்டச் செயலாளர் டி.சுந்தரம், புத்தகரம் இ,ஏழுமலை, திருமலை ஜி.துரைசாமி, எம்.சரவணன், எஸ்.ஏ.சீனிவாசன், இ.ராமன், எஸ்.பி. கண்ணன், பரமேஸ்வரி, சக்கரபாணி. அபிப் ரகுமான். கே.நரேந்திரன், எஸ்.என்.ராஜி, உமா மகேஸ்வரி, மோகனப்பிரியா, நளினி, செண்பகராஜ், காஞ்சி சண்முகம், வெங்கட்ராமன், கருணாநிதி, எம்.சீனிவாசன், டிவிஎஸ் கோபி, பா.சந்திரசேகர், பி.எஸ்.என்.எல்.குமார், கவி பிரியா, விக்னேஷ், வெற்றிவேல், பா.தேவராஜ், பாஸ்கர் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளைச் சார்ந்த தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரனை ஆதரித்து, திரு.வி.க. நகர் தெற்கு பகுதி வட்டம் 73–க்கு உட்பட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும் சென்னை மாநகராட்சி மேயருமான பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் எம். சாமிகண்ணு, மற்றும் வட்டச் செயலாளர் எம். தமீம் பாய் ஆகியோர் முன்னிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தோழர்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ராமசாமி தெரு, மன்னார்சாமி தெரு, டிமெலோஸ் சாலை மற்றும் வாழை மாநகர் உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.